T.A. பெற்றிக் குறே Art Spc BA,PGDE(Merit)

நு/தங்கக்கலை இல.01 த.ம.வி

Zoom – 04

தரம் 11 சித்திரக்கலை

முதலாம் தவணை 2021


1. இசுறுமுனிய விகாரை

அரச குடும்பம்

காதலர் சிலை

குதிரைத்தலையும் மனித வடிவமும்

நீராடும் யானைகள்



www.ikeduk

இசுறுமுனிய விகாரை

- இசுறுமுனிய விகாரையும் அங்கு காணப்படும் செதுக்கு வேலைப்பாடுகளும் **அனுராதபுர காலத்தைச்** சேர்ந்தவையாகும்.
- இசுறுமுனிய விகாரை அனுராதபுர திசாவாவியினருகே **"ரன் மசு" பூங்காவிற்கு தெற்கில்** அமைந்துள்ளது.
- இது இலங்கையில் அமைக்கப்பட்ட **முதல் பௌத்த** வணக்கத் தலமான விகாரைஎனக் கருதப்படுகிறது.
- இது **மகிந்த தேரரிடம் குருத்துவம்** பெற்ற **அரிட்ட குமாரன்** முதற் கொண்டு இசுறு குலத்தோர் 500 பேர்கள் வாழ்ந்த இடமெனவும்மகாவம்சம் கூறுகிறது.
- இது **கி.மு.மூன்றாம்** நூற்றாண்டில் **தேவநம்பியதீசன் மன்னனால்** கட்டுவிக்கப்பட்டது என **மகாவம்சம்** கூறுகிறது.



- வணக்கத் தலமாக இருந்தபோதும், இங்கு காணப்படும் கலை நிர்மாணங்கள் சமயச் சார்பற்ற தொனிப்பொருள்களை கொண்டவையே.
- அரைப் புடைப்பு, சிறுபுடைப்பு நுட்ப முறையிலான மனித விலங்கு உருவங்களும் செதுக்கல்களும் இவற்றுக்கு சான்று பகிர்கின்றன.

~ காதலர் சிற்பம்
~ அரச குடும்பம் செதுக்கல்
~ குதிரைத் தலையும் மனித உருவமும்
~ நீராடும் யானைகள்



- இச்செதுக்கல் படைப்புக்களில் உருவங்களின் தன்மை, விடயப்பொருள் ஆகியவற்றைக் காட்டுவதற்காக குப்தர் மற்றும் பல்லவர் கால இந்து கலைப் பொருள்களின் செல்வாக்கு பெறப்பட்டுள்ளது என்பது விமர்சகர்களின் கருத்தாகும்.
- இசுறுமுனிய செதுக்கல்கள் இலங்கையின் அருஞ் செல்வங்களாக கருதப்படும் நிலைத்துள்ள நிர்மாணங்களாகின்றன.

www.ikeou.lk

- இவற்றில் காணப்படும் கலைப் பண்புகள் தளத்துக்குப் பொருத்தமாகச் செதுக்கப்பட்டிருத்தல்.
- உணர்வுகள் முகத்தினாலும் மெய்ந்நிலைகளாலும் காட்டப்பட்டிருத்தல்.
- இயற்கையான வடிவங்களும் மெய்ந்நிலைகளும் சந்தத்துடன் வெளிப்பட்டிருத்தல்.
- மென்மையான, ஒப்பமான முழுநிறைவைக் கொண்டிருத்தல்.




www.tiredu.lk

அரச குடும்பம் செதுக்கல்

- இசுறுமுனிய செதுக்கல்களுள் அரச குடும்பக் காட்சியை சித்தரிக்கும் செதுக்கல் முக்கியத்துவம் வாய்ந்தது.
- இது 4 அடி நீளமுடைய அரைவட்ட வடிவமான கற் தகட்டில் அரைப்புடைப்பு நுட்ப முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- அரை வட்டவடிவ கற் தகட்டில் உருவங்களை சிறப்பாக ஒழுங்கமைத்து நடுவில் அரச தோரணையில் அமர்ந்திருக்கும் உரு உள்ளது.
- வலதுபுறத்தே கைகளை நெஞ்சு மீது கட்டி அமர்ந்த நிலையில் உள்ள ஓர் ஆணும், அவரின் பின்னால், மத்தியில் உள்ள உருவம் சாமரை வீசும் மற்றொருவரும் (சேவகன்) உள்ளனர்.
- பேராசிரியர் செனரத் பரணவித்தானவின் கருத்துக்கமைய இது துட்டகைமுனு மன்னனின் குடும்பமாகும்.
- அரச ஆடையணிகள் தரித்து மத்தியில் இருக்கும் உருவில் துட்டகைமுனு மன்னனும், வலதுபுறத்தே நெஞ்சு மீது கைகளைக் கட்டி நிற்கும் உருவம் குமாரன் சாலியனும் காட்டப்படுவதாக பரணவிதாரன அவர்கள் கருதப்படுகின்றன.
- அலங்கார ஆடை அணிகலன்களுடன் கூடிய உருவங்கள் லயத்துடன் செதுக்கப்பட்டுள்ளது.
- உணர்வுபூர்வ வெளிப்பாடு முகத்திலும், மெய்நிலைகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- அரைப்புடைப்பு நுட்ப முறையில் செதுக்கப்பட்ட அக்கம்.



காதலர் சிற்பம்



- குப்த சிற்பக் கலை மரபில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இது சதுரவடிவ கற் தகட்டில் அரை புடைப்பு சிற்ப நுட்ப முறையில் செதுக்கப்பட்டுள்ளது.
- இந்நிர்மாணிப்புத் தொடர்பாக பல கருத்துகள் உள்ளன. பேராசிரியர் செனரத் பரணவித்தான தெரிவித்துள்ள கருத்தே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.
- இதில் சாலிய குமாரனும் அசோகமாலாவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்.
- இவர்களது காதற் கதையுடன் தொடர்புள்ள (ரன் மசு உயன பூங்கா அண்மையில் அமைந்திருப்பதை அதற்கான காரணமாகக் காட்டியுள்ளார்.
- இந் நிர்மாணிப்பு பற்றிய ஏனையவர்களது கருத்துகள் பின்வருமாறு உள்ளன.

~ சிவ பார்வதி என்பது

~ மஞ்சுசிறீ – போதிசத்துவரின் ஒரு வேடம் என்பது

~ படைவீரனும் அவனது காதலியும் என்பது

- அலங்கார ஆடை அணிகலன்கள், ஆண்மை, சிறந்த தேக லட்சணம், உணர்வு வெளிப்பாடு, காதல் போன்ற பாவ உணர்வுகளுடன் இச்சிற்பம் பொளியப்பட்டுள்ளது.
- மென்மை, ஒப்பமான தன்மை, இயல்பான தளவடிவங்கள், சந்தத்துக்கு இசைவான தன்மையுடன் மெய்ந்நிலை வெளிப்பாடு போன்றவை இச்சிற்பத்தின் சிறப்பியல்பாகும்.

www.kedum.lk

குதிரைத்தலையும் மனித வடிவமும்

- இசுறுமுனிய விகாரைக் குளத்துடன் இணைந்த பாறைச் சுவர் மீது அமர்ந்திருக்கும் மனிதனும், குதிரை ஒன்றின் தலைப்பகுதியும் பொழியப்பட்டுள்ளது.
- மனிதன் கம்பீரமாக அமர்ந்து குளத்தை பார்த்துக் கொண்டு இருக்கும் விதம் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது.
- "மகாராஜ" தோரணையில் அமர்ந்து இருப்பதாகக் கூறப்படுகிறது.
- ஆடையணிகள் மிகக் குறைவாகவும் எளிமையாகவும் காட்டப்பட்டுள்ளன. தலையணி, காதுகளிலும் கைகளிலும் ஆபரணங்கள், இடையில் குறுஆடை போன்றவை உள்ளன.
- அவரது வலது புயத்தில் மாட்டப்பட்டுள்ள கயிறு குதிரையுடன் இணைந்ததாகும்.
- குதிரையின் தலை மாத்திரம் காட்டப்பட்டுள்ளது.
- பேராசிரியர் செனரத் பரணவிதான அவர்களின் கருத்துப்படி மனிதனும் குதிரைத்தலையும் நீரையும் அக்கினியையும் குறிக்கிறது. மனிதன் மழைக்கு அதிபதி வருணபகவான் எனவும், குதிரை மின்னலைக் குறிப்பதாக அவர் கருத்து.



www.ikeu.lk

- போர்வீரன் கபில ரிஷி என்னும் வேறு கருத்துக்களும் நிலவுகின்றன.
- பல்லவ சிற்ப மரபைத் தழுவி எளிமையான சுபாவத்தில் கம்பீரமான தோற்றத்துடன் பொழியப்பட்டிருப்பதும் சிறப்பாகும்.
- இது (அரைப்புடைப்பு) குறைபுடைப்பு நுட்பமுறையில் செதுக்கப்பட்டுள்ளது.
- மென்மையாகவும் மெருகுடனும் பூரணப்படுத்தி அரைப்புடைப்பு நுட்ப முறையில் பொழியப்பட்டுள்ளது.



www.tgcet.in



நீராடும் யானைகள்

- இசுறுமுனிய விகாரைக் குளத்துடன் இணைந்த பாறைச் சுவரில் இயற்கையான உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
- • இயற்கைக் கற்பாறையில் அரைப்புடைப்பு நுட்ப முறையில் இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.
- குளத்தில் இறங்கி நீராடும் யானைகளின் பல்வித மெய்நிலைகளின் காட்சி பாறைச் சுவரில் அரைப்புடைப்பில் செதுக்கப்பட்டுள்ளது.
- யானை உருவங்கள் நேராகவும் பக்கவாட்டிலும் அமைந்துள்ளன.
- யானைகளின் அசைவு, சந்தம், துடிப்பு என்பன வெளிப்படும் விதத்தில் ஒருங்கிணைத்து செதுக்கப்பட்டுள்ளன.
- பல்லவ சிற்ப மரபில் செதுக்கப்பட்டுள்ளன.
- இந்தியாவின் மாமல்புரத்து கங்காவரோகணச் (மாமல்லபுரம்)செதுக்கல்களை ஒத்திருப்பதாக கருதப்படுகிறது.
- இயற்கை வடிவமைப்பில் மிருதுவான தன்மையில் மெய்நிலைகள் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.



www.kec.lk

வினாக்கள்

- இசுருமுனிய விகாரையை கட்டுவித்த மன்னன் யார்?
- காதலர் சிலை எந்த பூங்காவிற்கு அண்மையில் காணப்படுகிறது?
- குதிரைத்தலையும் போர்விரனும் சிற்பம் எந்த மரபை தழுவியது?

நன்றி

www.ikeout.lk